


மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் குருபூஜை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., சோமசுந்தர பாண்டியன், நேரு பாண்டியன், சிறைச்செல்வன், சசிகுமார், பூமிநாதன், வீரராகவன், பால ராஜேந்திரன், பால்பாண்டி, தனசேகர், ஸ்ரீதர் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் நடைபெற்ற கோவூர், இரண்டாம் கட்டளை, கொல்லச்சேரி ஆகிய ஊராட்சிகளுக்கு உட்பட்ட பொதுமக்கள் ”மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் கலந்து கொண்டு இலவச வீட்டு மனை பட்டா, முதியோர் உதவித்தொகை, வீடு கட்டுவதற்கான கடன், தொழில் கடன், வேளாண்துறை சார்ந்த உதவிகள் போன்ற பல்வேறு மனுக்கள் வழங்கப்பட்டது, இதில் உடனடியாக பொதுமக்கள் அளித்த மனுக்களில் 15 மனுகள் மீது தீர்வு காணப்பட்டு அவர்களுக்கு சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு ஆணைகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு துணைத்தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், கோவூர் ஊராட்சி மன்ற தலைவர் பா.சுதாகர் மற்றும் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி

# அரசு கலை, அறிவியல் கல்லூரியில் - மாணவர் வழிகாட்டுதல் பயிற்சி!

## ஈரோடு கழக எம்.பி. கே.இ.பிரகாஷ் சிறப்புரை!

ஈரோடு, ஜூலை 12 - மாணவர் வழிகாட்டுதல் பயிற்சியில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே.இ பிரகாஷ் அவர்கள் சிறப்புரை வழங்கினார்

மொடக்குறிச்சி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியானது 03.07.2024 முதல் 10.07.2024 வரை சமூகத்தின் அனைத்து துறைகளிலிருந்தும் ஆளுமை மிக்க நபர்களை கொண்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இதில் 09.07.2024 அன்று முற்பகலில் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியில் புகையிலை தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

புகையிலை பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றி சிறப்புரை வழங்கிய திருமதி.கே.அருள்மொழி, வட்டார மருத்துவ அலுவலர், மொடக்குறிச்சி, மரு. ஏ.ஹேமலதா, மருத்துவ அலுவலர், எழுமாத்தூர். திருமதி.டி.சங்கீதா, சமூக ஆர்வலர், மாவட்ட புகையிலை கட்டுப்பாட்டு மையம், ஈரோடு. வி.ராஜேஸ்வரன், சுகாதார ஆய்வாளர், மொடக்குறிச்சி. என்.ஜீவானந்தன். சுகாதார ஆய்வாளர், அவல்பூந்துறை. ரா. சம்பந்தம். சுகாதார ஆய்வாளர் அறச்சலூர். மற்றும் எம்.தேவராஜன், சுகாதார ஆய்வாளர். அறச்சலூர், ஆகியோர்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்

அதனைத் தொடர்ந்து பிற்பகலில் நடைபெற்ற மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சியில் ‘கல்லூரி இளைஞர்களின் உயர் கல்வி’ என்ற தலைப்பில் நடைபெற்றது.

இதில் முனைவர்.க.மூ. சபிதா, துறைத்தலைவர் வணிகவியல் துறை அனைவரையும் வரவேற்றனர். கல்லூரி முதல்வர் ஜெ. எபெனேசர் தலைமையுரை நிகழ்த்தி னார்.

மேலும் சிறப்பு விருந்தினர் அறிமுகம் முனைவர்.மு.தர்மலிங்கம். கணினி அறிவியல் துறை அவர்களால் வழங்கப்பட்டது.. இவ்வழிகாட்டுதல் பயிற்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ். தமிழக அரசு கொண்டு வந்துள்ள திட்டங்களான நான் முதல்வன். தமிழ் புதல்வன், புதுமை பெண் போன்ற திட்டங்களை பற்றியும் கல்வியின் முக்கியத்துவம் குறித்தும் உற்சாகம் அளிக்கும் விதத்தில் பேசினார்.

மேலும் இடைவிடா கடின உழைப்பே வாழ்வில் முன்னேற சிறந்த வழி என மாணவர்களுக்கு விளக்கி மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்து விளங்க சிந்தனையை தூண்டும் வகையில் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சி முடிவில் முனைவர்.அ.நல்லசிவம், துறைத்தலைவர். வணிக நிர்வாகவியல் கணினிப் பயன்பாட்டுத்துறை நன்றியுரை வழங்கினார். மேலும் மாணவர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் மு. தர்மலிங்கம், கணினி அறிவியல் துறை அவர்களால் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது..

இந்நிகழ்வில் இளநிலை முதலாமாண்டு மாணவ ,மாணவியர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### மெட்ரோ ரயில் பணி: இன்று

# புரசை பகுதியில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஜூலை.12- சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் (CMRL) கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் எடுத்துச் செல்லும் பிரதான உந்து குழாயில் இணைப்புப் பணிகள் (புரசைவாக்கம் நெடுஞ்சாலையில்) மேற்கொள்ளப்படுவதால் 12.07.2024 அன்று காலை 10.00 மணி முதல் 13.07.2024 மாலை 06.00 மணி வரை (36 மணி நேரம்) மண்டலம்-5 (இராயபுரம்), மண்டலம்-6 (திரு.வி.க நகர்), மண்டலம்-8 (அண்ணா நகர்) மண்டலம்-9 (தேனாம்பேட்டை) மற்றும் மண்டலம்-10 (கோடம்பாக்கம்) - க்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

**மண்டலம் பகுதிகள்**

மண்டலம்-5 (இராயபுரம்) புரசைவாக்கம் (பகுதி), பெரியமேடு, சௌகார்பேட்டை, ஜார்ஜ் டவுன், ஏழு கிணறு ரோடு, முத்தியால்பேட்டை, வால்டாக்ஸ் ரோடு, எழும்பூர், பூங்கா நகர், சிந்தாதிரிப்பேட்டை, புதுப்பேட்டை, சேப்பாக்கம் (பகுதி), கொண்டிதோப்பு மண்டலம்-6 (திரு.வி.க. நகர்) ஓட்டேரி, அயனாவரம், பெரம்பூர், செம்பியம் மண்டலம்-8 (அண்ணா நகர்) கீழ்ப்பாக்கம், வில்லிவாக்கம், கெல்லிஸ், புரசைவாக்கம் (பகுதி) மண்டலம்-9 (தேனாம்பேட்டை) திருவல்லிக்கேணி, சேப்பாக்கம் மண்டலம்-10 (கோடம்பாக்கம்) தியாகராய நகர், சைதாப்பேட்டை

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும் என்று சென்னை குடிநீர் வாரியம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### சென்னை வடக்கு மாவட்டம்

# வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!



**மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், எம்.எல்.ஏ. அறிவிப்பு!**

வடசென்னை நாடாளுமன்றத் தொகுதியில் “இந்தியா”கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கழக வேட்பாளர் கலாநிதி வீராசாமி சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆர்.கே.நகர், இராயபுரம், பெரம்பூர் தொகுதியில் வட்டம் வாரியாக சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி கீழ்காணும் விவரப்படி நடைபெற உள்ளது.

| நாள் | நேரம் | தொகுதி |
|---|---|---|
| 14.07.2024<br>ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி முதல்<br>இரவு 9.00 மணி வரை | ஆர்.கே.நகர் மேற்கு பகுதி<br>ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி |
| 15.07.2024<br>திங்கள்கிழமை | மாலை 4.00 மணி முதல்<br>இரவு 9.00 மணி வரை | இராயபுரம் மேற்கு பகுதி<br>இராயபுரம் கிழக்கு பகுதி |
| 16.07.2024<br>செவ்வாய்க்கிழமை | மாலை 4.00 மணி முதல்<br>இரவு 9.00 மணி வரை | பெரம்பூர் வடக்கு பகுதி<br>பெரம்பூர் தெற்கு பகுதி |

மேற்கண்ட நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி -வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் “இந்தியா” கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

**ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.**

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.



சுதந்திர போராட்ட தியாகி அழகு முத்துக்கோன் அவர்களின் 267 வது குருபூஜையை முன்னிட்டு கட்டாலங்குளத்தில் உள்ள சுதந்திரப் போராட்ட தியாகி அழகு முத்துக்கோன் அவர்களின் திருஉருவச் சிலைக்கு நெல்லை மாநகராட்சி மேயர் (பொறுப்பு) கே.ஆர்.ராஜு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஆவின் கல்யாணி, ராஜா, பட்டு,கோபால், துர்காராம், மூர்த்தி, லட்சுமணன், வினோத், மாரியப்பன், நம்பி பெருமாள், பாலகணேஷ், பாஸ்கர், மாதவன் ஆகியோர் உள்ளனர்.

### வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. வாக்காளர்களுக்கு நாளை (13.07.2024) நன்றி தெரிவிக்கிறார்!



மதசார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர்ஆனந்த் 13.07.2024 (நாளை) காலை கீழ்கண்ட நிகழ்ச்சி நிரலின் படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**ஆம்பூர் சட்டமன்ற தொகுதி – மாதனூர் மேற்கு ஒன்றியம்**

| வ.எண். | நேரம் | இடம் | கலந்து கொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|---|
| 1. | காலை 8.30 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | மேல்குப்பம் |
| 2 | காலை 8.45 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | பாப்பனப்பள்ளி |
| 3 | காலை 9.00 மணி | அரசமரம் நூலுகம் எதிரில் | வடச்சேரி |
| 4 | காலை 9.15 மணி | பழைய திமுக அலுவலுகம் எதிரில் | சின்னபள்ளிகுப்பம் |
| 5 | காலை 9.45 மணி | RI கோட்ரஸ் எதிரில் | எம்.எஸ்.குப்பம் |
| 6 | காலை 10.00 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | வடகரை |
| 7 | காலை 10.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | வீராங்குப்பம் |
| 8 | காலை 10.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | தென்னம்பட்டு |
| 9 | காலை 11.00 மணி | பஸ் நிலையம் எதிரில் | மலையாம்பட்டு |
| 10 | காலை 11.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | அரங்கல்துருகம் |
| 11 | காலை 11.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | கதவாளம் |
| 12 | காலை 11.45 மணி | ராமர் கோயில் அருகில் | பார்சனாப்பள்ளி |
| 13 | காலை 12.00 மணி | ஊராட்சிமன்ற அலுவலகம் எதிரில் | மோதகப்பள்ளி |
| 14 | காலை 12.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | குமாரமங்கலம் |
| 15 | காலை 12.30 மணி | பஸ் நிலையம் எதிரில் | கம்மகிருஷ்ணபள்ளி |
| 16 | காலை 12.45 மணி | பஸ் நிலையம் எதிரில் | கரும்பூர் |
| 17 | காலை 1.15 மணி | பஸ் நிலையம் எதிரில் | வெங்கடசமுத்திரம் |
| 18 | காலை 1.45 மணி | கூட்ரோடு பஸ் நிலையம் | மிட்டாளம் |

**குடியாத்தம் சட்டமன்ற தொகுதி – மாதனூர் மத்திய ஒன்றியம்**

| வ.எண். | நேரம் | இடம் | கலந்து கொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|---|
| 1. | மாலை 4.00 மணி | தேவலாபுரம் | பஸ்நிலையம் |
| 2 | மாலை 4.20 மணி | துத்திப்பட்டு | பஸ்நிலையம் |
| 3 | மாலை 4.40 மணி | பெரியவரிகம் | பஸ்நிலையம் |
| 4 | மாலை 5.00 மணி | சின்னவரிகம் | பஸ்நிலையம் |
| 5 | மாலை 5.20 மணி | கைலாசகிரி | பஸ்நிலையம் |
| 6 | மாலை 5.40 மணி | நரியம்பட்டு | ஊர் மத்தியில் |
| 7 | மாலை 5.55 மணி | அயித்தம்பட்டு | கோயில் எதிரில் |
| 8 | மாலை 6.00 மணி | சாத்தம்பாக்கம் | ஊர் மத்தியில் |
| 9 | மாலை 6.20 மணி | பெரிய கொம்மேஸ்வரம் | ஊர் மத்தியில் |
| 10 | மாலை 6.40 மணி | சோமலாபுரம் ஊராட்சி | ஊர் மத்தியில் |




திருப்பூர் வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ப.கலைச்செல்வி ஏற்பாட்டில் ஆண்டிபாளையம் பகுதியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மகளிர்கள் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநில பிரச்சாரக் குழு நிர்வாகி செ.உமாமகேஸ்வரி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஆனந்தி, மாநகர அவைத் தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, பகுதி கழகச் செயலாளர் பி.முருகசாமி, தலைமைக் கழக பேச்சாளர் ரஜினி செந்தில் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி மகளிர் அணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.